KING TABERNACLE

# கூடாரத்தின் சத்தம்

MAY 2021

NEWS LETTER FOR PRAYER FROM

*SOUTH INDIA MISSIONARY MISSION*



## எலிசபெத்தே

நீ எங்கே இருக்கிறாய்?

## 2020–2021

ஊழியத்தின் கணக்கு விபரம்

மிஷனெரி இதழ்




KTM-SIMM

# கூடாரத்தின் சத்தம்

மிஷனெரி இதழ்

KING TABERNACLE
South India MISSIONARY MISSION

**தரிசனம்**

ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம்
பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும்
சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்,
அப்போது முடிவு வரும் (மத்தேயு 24:14)

நம்முடைய பிரதான தரிசனம் தென்இந்தியாவில் அறிவிக்கப்படாத கிராமப்பகுதியில் சுவிசேஷத்தை அறிவித்து, சபையை உருவாக்கி, சீஷத்துவ பயிற்சியளித்து அந்தந்த கிராமத்தில் ஊழியர்களை ஏற்படுத்துவோம். மற்றும் ஒவ்வொரு கிராமத்தில் எங்களால் முடிந்த பொது சேவையை செய்து. (கல்வி, மருத்துவம், பொது காரியம்) அவர்களை நித்திய ராஜ்ஜியத்திகு நேராக சேர்க்கும் பணியை செய்து வருகிறது.
நாம் வாழும் இந்த தென் இந்தியாவில் அறிவிக்கப்படாத எவ்வளவோ கிராமம் இருக்கிறது.
ஆகவே!
ஜெபிப்போம்! செயல்படுவோம்!!

**உங்கள் தொடர்புக்கு**

**தலைமை இடம் :**
கோவை
சகோ. ஜோசப் - 9751201167

**அலுவலக காரியங்களுக்கு**
சகோதரி. கிரேஸ் பிரிஸிலா
73970 31326



**எமது முகவரி**

**KING TABERNACLE**
South India **Missionary Mission**

36, Pappegounder St.,
KG Garden, Othakalmandapam,
Coimbatore 641032. INDIA

**e :** info@kingtabernacle.com
www.kingtabernacle.com





# ஜெபிக்கும் நண்பர்களுக்கு

*...நான் உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம்பண்ணுவேன், என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். (ஏசா.40:10)*

இந்த மாதத்தில் சற்றும் நமக்கு யோசிக்க வைக்கும் காரியம் என்னவென்றால் கடந்த ஆண்டு இதே மாதத்தில் தான் ஊரடங்கு உத்தரவு போடப்பட்டது, போடப்பட்ட ஊரடங்கு உத்தரவு 6 மாதம் வரை ஒன்றும் செய்யக்கூடாமல் இருந்தது, அந்த சமயத்தில் நடந்த பாதிப்பை இன்று வரை நாம் மேற்கொள்ள முயற்சி எடுத்துவருகிறோம், ஆனாலும் இது வரை நம்மால் முழுமையாக மேற்கொள்ள முடியாமல் இருக்கிறோம் ஆனால் தேவனுடைய நீதியின் கரம் நம்மை தாங்கிவருவதினாலே நாம் நிற்கிறோம், தேவன் நம்மை தாங்கவில்லை என்றால் நம்முடைய சூழ்நிலைகள் மிகவும் கடினமாக தான் இருந்திருக்கும், தேவன் நம்மை தாங்கினார், சகாயம் செய்தார் ஆகவே பிழைத்து இருக்கிறோம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம், அந்த ஊரடங்கு காலத்தில் தேவன் நமக்கு அநேக காரியங்களை கற்றுக்கொடுத்தார், ஜெப வாழ்க்கை, வேத தியானம், குடும்பத்தோடே நேரம் ஒதுக்குவது போன்ற நல்ல காரியங்கள் கற்றுக்கொடுத்தார், கடந்த ஆண்டு நாம் தேவனுக்கு செலவு செய்த நேரங்களுக்கு பதிலாக இந்த ஆண்டு பலனை பெற்றுக்கொள்ளும் ஆண்டாக மாற்றுவராக, இந்த ஆண்டு குறிப்பாக ஒரு சில மாதங்களில் நம்முடைய கடன், வியாதிகள், சமதானயின்மை போன்ற எல்லா காரியங்ளிலும் தேவன் நமக்கு சகாயம் செய்யும் மாதங்களாக மாற்றுவராக, தொடர்ந்து உங்கள் ஜெபங்களை விட்டுவிடாது இருங்கள், தேவனுடைய பாதத்தை பிடிப்போம், அவர் நம்மை கைவிடமாட்டார், நம்முடைய ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபித்து மற்றும் தாங்கி வரும் உங்கள் அனைவரையும் மேலே கொடுக்கப்பட்டடுள்ள வேத வார்த்தையின்படி கர்த்தர் உங்களை ஆசீர்வாதிப்பராக.

ஆமென்!

இப்படிக்கு
கிறிஸ்துவின் பணியில்
சகோ.பிரேம்குமார் (**KTM-SIMM**)



2020 - 2021 ஆம் ஆண்டுகான

# ஸ்பாதனத்தின் கணக்கு விபரங்கள்

கர்த்தருடைய நாமம் மகிமைபடுவதாக

ராஜ கூடாரம் – தென்னிந்திய மிஷனெரி இயக்கம் இந்த ஆண்டில் இதுவரை எங்களுடைய ஊழியங்களுக்காக ஜெபித்த, கொடுத்து உதவிய ஒவ்வொருவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தேவைகள் மாதம் மாதம் ஆயிரம் ஆயிரமாக இருக்கிறது, ஆனால் நம் தேவன் நம்முடைய தேவைகளை அனேகர் மூலமாக சந்தித்து வருகிறார். தமது ஊழியத்திற்கு மாதம் குறைந்தபட்சம் ரூ.20,000 வரை தேவைகள் இருக்கிறது, அது மட்டுமின்றி ஏதேனும் சிறப்பு கூட்டங்கள், ஆலய சீரமைப்பு பணி, ஊழியர்கள் நலன்கள் போன்ற காரியங்கள், வரும் போது எங்களுக்கு சிரமமாக தான் இருக்கும் ஆனால் கர்த்தர் நடத்திவருகிறார், கடந்த ஆண்டு 2020 ஏப்ரல் முதல் 2021 மார்ச் வரை ஊழியத்தின் வந்த வரவு செலவு பற்றி சொல்ல வேண்டியது எங்களுடைய கடமையாக இருக்கிறது. “**எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப்பணத்தைக் குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து, கர்த்தருக்கு முன்பாகமாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்.**” (2கொரி 8:20, 21)

கடந்த ஆண்டு ஏப்ரல் 2020 மாதம் கொடுத்த கணக்கு விபரங்களில் 2765 ரூபாய் இருப்பதாக சொல்லியிருந்தோம். தற்பொழுது ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021 வரை, வரவு மற்றும் செலவு விபரங்களை தற்பொழுது வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

புதிதாக ஆரம்பிக்கின்ற பணிதளத்திலிருந்து கணக்கு ஓராண்டு வரை அவர்களிடம் எந்த ஒரு காணிக்கை விவரமும் பெறப்படமாட்டாது அவர்களுக்குரிய தேவகைள் முழுவதும் ஸ்தாபனத்தின் மூலம் சந்திக்கப்படுகிறது, அதுக்கு அடுத்த ஆண்டில் இருந்து கணக்கு விபரங்கள் பெறப்படும் அதின் அடிப்படையில் பி.நாகூர் மற்றும் மலேகவுண்டபாளையம் இந்த பகுதி கடந்த மே மாதம் ஆரம்பித்தபடியால் இதை தவிர மற்ற ஒத்தக்கால்மண்டபம், வழுக்குபாறை, மீனாட்சிபுரம், P.N.புதுார் பகுதிகளின் மற்றும் ஸ்பானத்தின் கணக்கு விபரங்கள்.

ஸ்தபானத்தின் மொத்த வரவு, செலவு விவரங்கள் மேல் குறிப்பிட்டுள்ள அடிப்படையில் ₹. 2765 இருப்பு தொகையாக ஆரம்பமானது.

**செலவு விபரங்கள்**

- சபை பராமரிப்புக்காக – ₹. 44846
- வாடகை (ம) EB – ₹. 18130
- சம்பளம் (ம) சிறப்பு காணிக்கை – ₹. 48900
- Purchase – ₹. 96850
- வாகன பராமரிப்பு – ₹. 26965
- சிறப்பு கூட்டம் (ம) இதர- ₹. 14950
- மொத்த வரவு – ₹. 2,89,715
- மீதமுள்ள தொகை – ₹. 39,074

உங்களுக்கு ஏதேனும் காரியம் அறிய விரும்பினால் ஸ்தபானத்திற்கு தொடர்புக் கொண்டு முழு விவரங்களை கேட்டு அறிந்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் மூலமாக எங்களுக்கு கொடுக்கப்பட்ட பணம் அதை சரியாக உபயோகிக்க வேண்டியதும் அதின் கணக்கை உங்களுக்கு கொடுக்க வேண்டியதும் எங்கள் கடமை. இதுவரை உதவி செய்த உள்ளங்களுக்கு எங்களது நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகிறோம். மேலும் விவரங்களுக்கு எங்கள் தணிக்கையாளர்களை அனுகவும்.

இப்படிக்கு
சகோதரி. கிரேஸ் பிரிஸிலா

## “ஐக்கிய புத்தாண்டு ஆராதனை”

நமது நான்கு பணிஸ்தலங்கள் இணைந்து மாலேகவுண்டன்பாளையம் ஸ்தல சபையில் கூடிய புது வருட ஆராதனை வெகு சிறப்பாகவும், சமாதானத்துடனும் தேவ பிரசன்னம் நிறைந்ததாகவும் அமைந்தது.
டிசம்பர் 31 இரவு 10.30 மணிக்கு துவங்கிய ஆராதனை ஜனவரி 1 2020 அதிகாலை 4 மணி வரை துதி ஆராதனை ஜெபம், பழைய வருட செய்தி, புது வருட வாக்குதத்த செய்தி. ஐக்கிய திருவிருந்து மற்றும் ஐக்கிய விருந்து என மிகவும் மகிழ்வாக நடந்தேறியது ஜெபித்த, பங்குபெற்ற அனைவருக்கும்
KTM SIMM-ன் நன்றிகள்.







# முக்கிய நிகழ்வுகள்

**2021ம் ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை நம்முடைய ஸ்தாபனத்தில் நடைப்பெற்ற முக்கிய நிகழ்வுகள்**






## சிறப்பு உபவாச கூடுகை

ஜனவரி 14, 2021 அரசு விடுமுறை நாளன்று நமது P.N புதூர் ஜெப மையத்தில் வைத்து ஓர் **சிறப்பு உபவாச கூடுகை கிராம ஊழியங்களுக்காகவே** ஜெப கூட்டமாக நடைபெற்றது. அதில் நமது KTM SIMM ஊழியர்கள், விசுவாசிகள் என குடும்பமாக கூடி பாராத்தோடு ஜெபித்தது நமது மிஷனெரி ஊழியத்திற்கு மேலும் பெலத்தை உண்டாக்கியது போல் நேர்த்தியாக அமைந்திருந்தது கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## ஆண்டு ஆசீர்வாதம் கூட்டம்

மீனாட்சிபுரம் என்ற பகுதியில் ஜனவரி மாதம் 1, 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் சிறப்பு கூட்டம் நடைபெற்றது அதில் சகோ. ராக்சேஷ், சகோ. ஜெனு சிறப்பு தேவ செய்திகள் கொடுக்கப்பட்டது, இதன் பொறுப்பாளர் சகோதரி. கிரேஸி இந்த கூட்டத்தை சிறப்பாக ஒழுங்கு செய்தார்கள்.



## மறு சீரமைப்பு வேலைகள் (P.N.புதூர்)






நம்முடைய P.N. புதூர் வடவள்ளி ஜெப மையத்தில் தற்பொழுது மறு சீரமைப்பு வேலைகள் (Interior & Exterior Work) நடைபெறுகின்றது. இந்த ஜெப மையம் நமது ஊழியங்களின் மைய இடமாக இருப்பதால் மறுசீரமைப்பு மற்றும் பெயிண்டிங் வேலைகள் வெகு நாட்களாக தடைபட்டிருந்தது ஆனால் ஜெபங்களை கேட்கிற தேவன் அதற்கான பொருளாதார தேவைகள், ஆட்கள் தேவைகள் என தயவு பாராட்டின படியால் வேலைகள் முடிக்கப்பட்டுவிட்டது, தேவைகள் சந்திக்கப்பட்டது ஜெபித்த, தாங்கின அனைத்து இதயங்களுக்கும் நன்றி.

## கோயமுத்தூரின் கிராமங்களின் ஆய்வு

நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக பெரும் பிரயாசங்களை மேற்கொண்டு செய்து வந்த **கோயமுத்தூரின் கிராமங்களின் ஆய்வு** முடிவு அடைந்துவிட்டது. தற்பொழுது அதனுடைய ஆடியோ மற்றும் வீடியோ பதிவுகளுக்காக ஆயத்தமாகிவருகின்றது.

## 11 ஆண்டுகள் நடத்தி வந்த தேவனுக்கு நன்றி








கடந்த 2009 ம் ஆண்டில் மூத்த ஊழியர்களின் மூலமாக ஊழியத்திற்கு சகோ. பிரேம் குமார் பிரதிஷ்டை செய்யப்பட்டு அநேக பாதைகளை கடந்து வந்து இது வரை நடத்திய தேவனுக்கு நன்றி, கடந்த ஜனவரி 26 2021 அன்று ராஜகூடார தென் இந்திய மிஷெனரி இயக்கம் 11 ஆண்டு ஊழிய பாதையை நிறைவு செய்து 12ம் ஆண்டிற்குள் சென்றது. அன்றைய தினம் சிறப்பு ஸ்தோத்திர கூட்டமும் 12ம் ஆண்டு ஊழிய அர்ப்பணிப்பு பிரதிஷ்டை ஆராதனையும் நடைபெற்றது. அதே சமயம் நமது பணிஸ்தல விசுவாசிகள் ஊழியர்கள் மற்றும் சிறப்பு விருந்தினராக சுவி. ஜான் ரவிச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு தேவ செய்தியும், சிறப்பு ஜெபமும் செய்தது ஆசீர்வதாமாக அமைந்தது. 12 ஆண்டுகள் உடன் இருந்து இன்று அநேக கிராமங்களை சந்தித்திட உறுதுணையாக இருந்த அனைத்து ஊழியர்களுக்கும், ஜெப பங்காளர்களுக்கும், பொருளாதார பங்காளர்களுக்கும் எங்கள் இருதயத்தின் நிறைவுகளுடன் நன்றிகளை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### 49ம் ஆண்டு விழா

மாதேகவுண்டன்பாளையத்தில் 49வது ஆண்டு ஸ்தோத்திர கூட்டம் 18 ஏப்ரல் 2021 அன்று நடைபெற்றது. கடந்த 12 ஏப்ரல் 1972ம் ஆண்டு இந்த நாளில் இந்த சபை திறக்கப்பட்டதை நினைத்து ஆண்டவருக்கு நன்றி கூட்டம் நடத்தப்பட்டது. இதில் தேவ ஊழியர்கள் சகோ. ராக்கேஷ் மற்றும் பல பேர் கலந்து கொண்டு வாழ்த்தி ஜெபித்தார்கள்.

### தெருவில் சுவிஷேச கூட்டம்

பி.நாகூர் பகுதிகளுக்கு போதகர். நித்தி அவர்கள் ஜனவரி மாதத்தில் இருந்து பொறுப்பெடுத்துள்ளார், அதே மாதத்தில் 31ம் தேதி ஞாயிறு மாலை 5.00மணிக்கு சகோ. ஜோசப் வுடன் இணைந்து தெருவில் சுவிஷேச கூட்டம் நடத்தினார்கள், மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. அனேக ஜனங்கள் தேவ வார்த்தை கேட்க உதவியாக இருந்தது.

### தேர்தல் விழிப்புணர்வு நோட்டீஸ்

02 ஏப்ரல் 2021 அன்று மாதேகவுண்டன் பாளையத்தில் தேர்தல் விழிப்புணர்வு செய்யப்பட்டது, சுமார் 110 வீடுகளை அந்த பகுதி ஊழியர்கள் சகோ. ஜோசப், சகோ. கலோப் மற்றும் நம்முடைய ஸ்தல சபையின் விசுவாசிகளுடன் இணைந்து செயல்பட்டுள்ளார்கள்.






சுய புத்தியில் சாயாமல் கர்த்தருடைய சமூகத்திலேயே அவருக்காக காத்திருந்து அவரது சித்தத்தை செய்திட தேவனால் புதிய பெலனை பெற்று கழுகுகளைப்போல உயர எழும்பிட தங்களது அன்றாட ஜெபத்தில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள். சர்வ வல்ல தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு

KTM - SIMM குடும்பம்





## 2021ம் ஆண்டுக்கான
## இந்த ஆண்டு தரிசனம்

**1. புதிய கிராம சபைகள் ஸ்தாபிக்க வேண்டும்.**

தற்பொழுது 6 சபைகள் இயங்கி கொண்டு இருக்கிறது, இந்த ஆண்டு புதிய 4 கிராமங்களில் சபை கொண்டு வர ஜெபிப்போம்.

**2. ஆதரவற்று தெருவில் இருப்போரை ஆதரவு கொடுத்து உருவாக்கிட வேண்டும்**

தற்போதிய சூழ்நிலைகளில் தெருவில் பிச்சை கேட்ப்போர்கள் பல பேருடைய நிலைமை உண்மையாகவே யாராவது நம்மை தூக்கிவிட மாட்டார்களா? என்று என்னுவது உண்டு, அவர்களை நாம் சந்தித்து உடல் ரீதியாக இருக்கும் பிரச்சகளை மற்றும் மன ரீதியாக இருக்கும் பிரச்சனைகளை மாற்றி அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை கொடுக்கும் வண்ணமாக புதியதாக தொடங்க போகிற ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

**3. வழுக்குபாறை மற்றும் மீனாட்சிபுரம் பகுதியில் புதிய இடம் வாங்க வேண்டும்**

கடந்த 4 ஆண்டுகள் மேலாக இந்த சபை நடந்து வருகிறது, தற்பொழுது நிலையற்ற கட்டிடத்தில் இருக்கும் இந்த இடங்களில் புதிய சபைகென்று இடம் வாங்க ஜெபிப்போம்.

**4. புதிய மிஷனெரி பயிற்சி பள்ளி ஆரம்பிக்கப்பட வேண்டும்.**

*ஜெபியுங்கள் மற்றும் செயல்படுங்கள்*




நமது செய்தி மடல் உங்களுக்கு இலவசமாக தரப்படுகிறது. உங்களால் இயன்ற காணிக்கையை அனுப்பி இவ்வூழியத்தை தாங்குங்கள். பிறருக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் காணிக்கைகளை HDFC BANK We understand your world மூலமாகவும் அனுப்பலாம்.

**KING TABERNACLE TRUST**
**A/C. No. : - 50200015082760 | IFSC Code :- HDFC0004142**
**Branch : SIDDHAPUDUR, Coimbatore**



# எலிசபெத்தே

## நீ எங்கே இருக்கிறாய்?

தேவச்செய்தி : சகோ. க. ஹட்சன் குமார்

மலடியாய் இருந்த நீ முதிர்வயதுவரை உன் விசுவாசத்தை விட்டுவிடாமல், கர்ப்பத்தின் கனிக்காக விண்ணப்பத்தில் ஈடுபட்டுவந்த (லூக்1:13) எலிசபெத்தே!

...இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்?

கர்த்தருடைய கற்பனையில் குறைவில்லாமல் இருந்த நீ (லூ.1:6) குறைந்த விசுவாசமுள்ள கணவனுடன் வாழ்ந்தாலும் (லூ.1:20) உன் விசுவாசத்தைக் காத்துக்கொண்ட எலிசபெத்தே!

...இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்?

தேவசமூகத்தில் தகாத வார்த்தையை வசனித்ததால் பேசும் ஆற்றலை உனது கணவன் இழந்தபோதும், தேவனுக்கு விரோதமாய் முறுமுறுக்காமல் இருந்த எலிசபெத்தே!

...இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்?

ஜனங்களுக்குள் நிந்தையாக இருந்த உன் வாழ்வை (லூக் 1:24) தம் கிருபையால் விந்தையாக மாறச்செய்த தேவனை துதிக்க சிந்தை வைத்த (லூக்.1:26) எலிசபெத்தே, பாலன் இயேசு எருசலேமில் வந்திருக்கிறார்.

... இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்?

மரியாளின் வரவை நினைத்து மகிழ்ந்தாயே! அவளின் வயிற்றில் தோன்றும் பிள்ளை, மேசியாவாகிய ஆண்டவர் என்று அறிந்தாயே! மரியாளின் வாழ்த்துதலை கேட்டதும், பரிசுத்த ஆவியால் நிறைந்தாயே, அவளின் விசுவாசத்தை உறுதிப்படுத்த



தீர்க்கதரிசனம் உரைத்தாயே, அருகில் இருக்கும் பெத்லகேமில் கிறிஸ்து அவதரித்து விட்டார்,

.... இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்?

நாசரேத்தூரில் வசித்த இளம்பெண் மரியாள், உன் செய்தியை கேட்டு 130 கிலோமீட்டருக்கு அப்பால் யூதேயா மலைநாட்டில் வசித்த உன்னை சந்திக்க சிரமத்தை எடுத்து வந்த செயலை அறிந்த எலிசபெத்தே உலக இரட்சகர் எருசலேம் தேவாலயத்திற்கு வந்துவிட்டார்,

... இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்?

தேவதூதரால் செய்தியைக் கேட்ட: அற்பமாய் எண்ணப்பட்ட மேய்ப்பர்களும், ஆலயத்தில் இருந்த எண்பத்துநாலு வயது நிரம்பிய அன்னாளும், ஆவியைப்பெற்ற சிமியோனும், தேடிவந்து பாலகனை பணிந்துகொண்டனர். இவர்கள் கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியை கேட்பதற்கு முன்பே, அந்த வெளிப்பாட்டை பெற்றும், இயேசுபாலகனை தரிசிக்க தவறிய எலிசபெத்தே!

... இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்?

மரியாளுக்கு உதவிசெய்ய மறுத்த எலிசபெத்தே! உலக இரட்சகரை தரிசிக்க தவறிய காரணம் என்ன? மரியாள் தான், உன் மேசியாவாகிய ஆண்டவரின் தாயார் என்ற வெளிப்பாடு கிடைத்தும், கிரியைகளில் அதை செயல்படுத்த விடாமல்,

உன்னை தடுத்தது எது?

யோவானின் வரவு, யெகோவா தேவனின் முகத்தை மறைத்துவிட்டதோ! தேவதூதனால் முன்அறிவிக்கப்பட்டு குழந்தை பெற்றெடுத்ததால் பெருமை உன் மனதை மாற்றிவிட்டதோ! ,முதிர்வயதில் பிள்ளை பெற்றதால், சரீரபெலவீனம் உன்னை தடுத்துவிட்டதோ! அல்லது ஆதியில் கொண்டிருந்த அன்பு உன்னில் குறைந்துவிட்டதோ! யோவான் ஸ்நானகனை பெற்றெடுத்த சரீரபிரகாரமான தாய் எலிசபெத்தை பார்த்து இந்த கேள்விகளை கேட்பதாக எண்ணிவிடவேண்டாம்... அந்த எலிசபெத் காலத்தால் மறைந்துபோனாள். அவளைப் பார்த்து இந்த கேள்விகளை கேட்பது அர்த்தமற்றது. இன்றைக்கு உயிரோடு இருக்கும் திருச்சபை என்னும் ஆவிக்குரிய எலிசபெத்துகளை பார்த்து கேட்க விரும்புகிறேன்..... எலிசபெத்தே!

...இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்?

இழந்துபோனதை தேடவும் இரட்சிக்கவும் வந்த தேவ குமாரனாகிய இயேசுவின் பிறப்பை கொண்டாடுகிற திருச்சபையே!

நமது வாழ்வின் ஆவிக்குரிய எல்லை கிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூறுவதோடு நின்றுவிடாமல், கடந்த நாட்களில் இழந்துபோன நற்குணங்களையும் கிருபைகளையும் தேடி கண்டடைய பிரயாசப்படுவோம். வருடத்தின் இறுதியை எட்டியிருக்கிற நாம், அவர் பிறப்பின் நோக்கத்தை பின்பற்றி வாழ நம்மை அர்பணித்தவர்களாக புதிய ஆண்டை தொடர்வோம். தேவன் தாமே தங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

ஆமென்!!!

# ஜெபம் நேரங்கள்

### கோயமுத்தூர் கிராமங்கள் சர்வே

• நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக பெரும் பிரயாசங்களை மேற்கொண்டு ஏறெடுக்கப்பட்ட "கோயமுத்தூர் கிராமங்கள் சர்வே" இறுதிகட்ட ஆடியோ, வீடியோ, பதிவுகளுக்காக ஆயத்தமாகிவருகின்றது தேவ தயவால் இந்த ஆண்டிற்குள் அனைத்தும் நேர்த்தியாக முடிவுபெற்று விரைவாக சர்வே வெளியிடப்பட இதுவரை ஜெபித்த தாங்கள் இனியும் தொடர்ந்து இதற்காக ஜெபிக்கும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

### வழுக்குப்பாறை பனிஸ்தலத்தில் இடம் வாங்க

• வழுக்குப்பாறை பனிஸ்தலத்தில் 10 செண்ட் இடம் சுமார் 9 லட்சம் சபைக்கென விற்பனைக்கு வந்துள்ளது இடம் வாங்கிட அனுகூலமான வாசல்களை ஒத்தாசைகளை தேவன் தரும்படியாக ஜெபியுங்கள், தாங்குகள்

### இந்த ஊழியங்களில் ஆத்துமா இரட்சிக்கப்பட

• 2021 ம் ஆண்டில் நமது அணைத்து சபைகளும் குறைந்தது 50 ஆத்துமாக்களை உடைய சபைகளாக வளர்ச்சியடைய ஆதி அப்போஸ்தலர் நாட்களில் நடந்த அற்புத அடையாளங்கள் போல் ஊழியர்களும், ஜனங்களுக்குள்ளும் மாற்றம் உண்டாகிட ஜெபியுங்கள். ஆத்ம பாரம், ஜெப ஆவி ஊற்றப்பட ஜெபியுங்கள்.

### மிஷனெரி எழும்ப மற்றும் புதிய கிராமங்களில் ஊழியம் உருவாக

• இந்த ஆண்டில் இன்னும் பல புதிய கிராமங்களை, ஜனங்களை சந்திக்கவும், புதிய பணிஸ்தலங்கள் KTM SIMM மூலம் உருவாக்கப்படவும், அற்பணிப்புள்ள மிஷனெரி ஊழியர்களை தேவன் எழுப்பும்படியாகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### மருத்துவர்களுக்காக

• பீகார் மாநிலம் முங்கர் மாவட்டத்தைச் சேர்ந்த அரசு மருத்துவமனை மருத்துவர் ஒருவர் தொடர் கொரோனா பணிகள் மற்றும் பணிச்சுமை காரணமாக மன அழுத்தத்தில் தற்கொலை நோய் தடுப்பு பணிகளில் ஈடுபடும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் பாதுகாப்புக்காக ஜெபிப்போம்.

• நம் நாட்டின் பிரதமர், அமைச்சர்கள் மற்றும் அனைத்து அரசு துறையில் பணி



செய்பவர்களுக்கு, மக்களுக்கு மீது அக்கறை கொண்டவர்களாக செயல்பட ஜெபிப்போம்.

• பெருந்தொற்று காரணமாக பெரும் சவாலை சந்திக்கும் மகாராஷ்டிரா, டெல்லி, தமிழ்நாடு மற்றும் கேரளா போன்ற மாநிலங்களுக்காக சிறப்பாக ஜெபிப்போம்.

• ஆக்சிஜன் தேவைகளுக்காக அலைந்து அழுது புலம்பும் மக்களுக்காக, அவர்களுக்கு ஆக்சிஜன் கிடைக்க

• கொரோன கட்டுப்பாட்டுக்குள் வர ஜெபிப்போம்.







### தேர்தலுக்காக

• நடந்து முடிந்த தேர்தலில் தேவன் யாரை ஆட்சிக்கு கொண்டு நினைக்கிறாரே? அவர்கள் ஆட்சிக்கு வர ஜெபிப்போம்.

• ஆட்சிக்கு வரும் தலைவர்கள், மக்களின் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும். மக்களுக்கு நன்மையான திட்டங்கள் வர வேண்டும், அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு வறுமை மாறி செழிப்பு நிறைந்த நாடாக இருக்க வேண்டும். இதற்காக ஜெபிப்போம்.




### மக்களின் தேவைவுள்ளவர்களுக்காக

நமது பணி தளங்களில் ஒத்தக்கால்மண்டடம், வழுக்குபாறை உள்ள இரண்டு இடங்களிலும் இரண்டு பாட்டிமார்கள் நடக்க முடியாமல் இருக்கிறார்கள், பி.என்.புதூரில் சீதாலட்சுமி அம்மா, சகோ. இஸ்ரேல் மற்றும் அவர்களின் சகோதரி. ரேஷ்மா ஏத்தம்மா மற்றும் அவர்களின் மகள் வேலைகாக, சகோ. முரளி அவர்கள் குடும்பத்திற்காக மற்றும் மற்ற நம்முடைய சபையின் மக்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்

## ஊழியங்களின் தேவை

நாம் அனேக நாட்களாக நம்முடைய வழுக்குபாறை
பகுதி பணி ஸ்தலத்தில் சபைக்காக இடம் வாங்கிட வேண்டும் என ஜெபித்தோம்,
தற்பொழுது வாழுக்குாறையில் 10 சென்ட் அளவுள்ள
இடம் விற்பனைக்கு வந்துள்ளது, அதன் மதிப்பு 9,00,000 ரூபாய் கூறியுள்ளனர்.
எனவே இந்த இடத்தை வாங்குவதற்கு தேவையான
பணத்தை கர்த்தர் சந்திக்கும்படியாக ஜெபிப்போம். முடிந்தவர்கள் தாங்குவோம்
நன்றி!

G Pay पे **96777 31326**



இது வெறும் மாதரி படம்,
இது உண்மையான படம் அல்ல.


IF UNDERLIVERED PLEASE RETURN TO

**KING TABERNACLE -** SouthIndia Missionary Mission

36, Pappegounder St., KG Garden, Othakalmandapam, Coimbatore 641032.
**M** : 7397031326 | e : info@kingtabernacle.com | **www.kingtabernacle.com**


Use Pin code for Speed Post / If Undelivered Please Return to

**UNDER CLAUSE 121 of PO. guide up to 100gms Rs. 1/-**

**PRINTED BOOK ONLY**
**NOT FOR SALES**


Published by R. Premkumar @ King Tabernacle - South India Missionary Mission
Printed by DESIGN ART, Coimbatore 641012. | T : 9677731326
**PRIVATE CIRCLE ONLY**